


# நாணயக் கொள்கை அறிக்கையின் முக்கிய விடயங்கள்

## 2025 பெப்புருவரி

2025 பெப்புருவரி 14


இலங்கை மத்திய வங்கியின்
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

# சட்டத் தேவைப்பாடு

*மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 27 மற்றும் 80 என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில், தொடர்புடைய மீளாய்வுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கைத் தீர்மானங்களுக்கான அடிப்படைகளைப் பொதுமக்களுக்கும் ஏனைய ஆர்வலர்களுக்கும் தொடர்பூட்டுகின்ற அதேவேளையில் தோற்றப்பாட்டிற்கான இடர்நேர்வுகளின் மதிப்பீடொன்றுடன் இணைந்து பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சித் தோற்றப்பாடு என்பன தொடர்பான வழிகாட்டுதலினை வழங்கும் பொருட்டு நாணயக் கொள்கை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.*

# நாணயக் கொள்கை அறிக்கையின் நோக்கம்...

- வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தலும் நாணயக் கொள்கையின் நியாயப்பூர்வத்தன்மையை தொடர்பூட்டலும்
- நாணயக் கொள்கையின் பொறுப்புக்கூறும்தன்மையினை அதிகரித்து நம்பகத்தன்மையினைக் கட்டியெழுப்புகின்றது
- நிதியியல் சந்தைகளுக்கும் சகல ஆர்வலர்களுக்கும் வழிகாட்டுதலினை வழங்குகின்றது
- பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துகின்றது
- கொள்கை ஒருங்கிணைப்பினை மேம்படுத்துகின்றது

# உள்ளடக்கம்

- இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு
- சுருக்க அறிக்கை
- நாணயக் கொள்கைச் சுருக்கம்
- பணவீக்கம் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடு
  - அடிப்படை எதிர்வுகூறல்
  - எதிர்வுகூறலுக்கு அடிப்படையாகவிருக்கும் முக்கிய எடுகோள்கள்
  - பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி எறிவுகளுக்கான இடர்நேர்வுகள்
  - முன்னைய எதிர்வுகூறலுடனான ஒப்பீடு

*நாணயக் கொள்கை அறிக்கையின் முக்கிய கவனம்*

- தற்போதைய பொருளாதார நிலைமைகள்
  - உள்நாட்டுத் துறை மற்றும் உலக அபிவிருத்திகள்

*இதற்கு மேலதிகமாக,*

*"பணவீக்க வீச்சு வரைபடத்தை எப்படி விளங்கிக்கொள்வது"*

*"இலங்கையின் பணச்சுருக்கத்தினை ஏற்படுத்திய விலைப் போக்குகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள்"*

*பற்றிய சிறப்புக் குறிப்புக்கள்,*




# நாணயக் கொள்கைச் சுருக்கம்

# இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கையை தொடர்ந்தும் தளர்த்தியது…

## கடந்த நாணயக் கொள்கை அறிக்கையிலிருந்து…

**2024 செத்தெம்பர்**

கொள்கை வட்டி வீதங்கள் 8.25 சதவீதம் (துணைநில் வைப்பு வசதி வீதம்) மற்றும் 9.25 சதவீதமாக (துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம்) பேணப்பட்டன

**2024 நவெம்பர்**

மத்திய வங்கி ஒற்றைக் கொள்கை வீத பொறிமுறைக்கு நகர்ந்தது


ஓரிரவு கொள்கை வீதம் அறிமுகப்படுத்தப்பட்டது

ஓரிரவு கொள்கை வீதம் ஏறத்தாழ 50 அடிப்படைப் புள்ளி நடைமுறைக் குறைப்புடன் 8.00 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது

**2025 சனவரி**

ஓரிரவு கொள்கை வீதம் 8.00 சதவீதமாகப் பேணப்பட்டது

ஓரிரவு கொள்கை வீதம், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் மற்றும் துணைநில் வசதி வீதங்கள்





"2024 நவெம்பரில் மத்திய வங்கியானது அதன் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டை மேலதிக வீதக் குறைபொன்றுடன் ஆண்டுமுழுவதும் பேணியது"




# பணவீக்க வளர்ச்சியும் தோற்றப்பாடும்

# முதன்மைப் பணவீக்கமானது 2024ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் வீழ்ச்சியடைந்து, செத்தெம்பரிலிருந்து எதிர்மறையாக காணப்பட்டது...

ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு
(கொ.நு.வி.சுட்டெண்)





மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

பணச்சுருக்கப் போக்கானது முக்கியமாக மின்சாரக் கட்டணங்களின் கணிசமானளவு கீழ்நோக்கிய திருத்தங்களினால் உந்தப்பட்டிருந்தது.

நீர்க் கட்டணங்களின் குறைப்புக்கள் மற்றும் மிதமடைந்த உணவு விலைகளுடன் இணைந்து, உள்நாட்டு எரிபொருள் மற்றும் திரவப் பெற்றோலிய எரிவாயுவின் விலைகளுக்கான கீழ்நோக்கிய திருத்தங்களும் இவ்வீழ்ச்சிக்கு பங்களித்திருந்தன

# முதன்மைப் பணவீக்கமானது நடுத்தர காலப்பகுதியில் ஏறத்தாழ 5 சதவீதம் கொண்ட இலக்கிடப்பட்ட மட்டத்திற்கு படிப்படியாக உறுதியடைவதற்கு முன்னர் அண்மைய காலத்தில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது...

எறிவுசெய்யப்பட்ட முதன்மைப் பணவீக்கம்:
(காலாண்டு ரீதியாக, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)
*2024 சனவரி மாத நாணய கொள்கைச் சுற்றின் எறிவுகளின் அடிப்படையில்*





- பணச்சுருக்க நிலைமைகள் அண்மைய காலத்தில் தொடர்ந்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது
- பணவீக்கமானது 2025ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து 2026ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் இலக்கை விட அதிகரிக்கலாமெனினும், இவ்விலகல் குறுகிய காலத்திற்கு இருக்குமென எறிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

**பணவீக்கமானது பொருத்தமான கொள்கை வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலினால் துணையளிக்கப்பட்டு, நடுத்தர காலத்தில் 5 சதவீதம் கொண்ட இலக்கிடப்பட்ட மட்டத்தை அடையுமென எதிர்வுகூறப்படுகின்றது**

குறிப்பு: *வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 2022 கா4 வரையான அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ள வேளையில், இக்காலப் பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன. 2025 சனவரியிலுள்ள எதிர்வுகூறல் சுற்றில் காணப்படும் அனைத்து கிடைக்கக்கூடிய தரவுகளையும் எறிவுகள் அடிப்படையாகக் கொண்டுள்ளன.*

# மையப் பணவீக்க எறிவுகள் குறைந்தளவான தளம்பலைப் பிரதிபலிக்கின்றன...




*குறிப்பு: வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 2022 கா4 வரையான அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ள வேளையில், இக்காலப் பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன. 2025 சனவரியிலுள்ள எதிர்வுகூறல் சுற்றில் காணப்படும் அனைத்து கிடைக்கக்கூடிய தரவுகளையும் எறிவுகள் அடிப்படையாகக் கொண்டுள்ளன.*

- மையப் பணவீக்கமானது 2024 சனவரியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பெறுமதிசேர் வரிச் சீராக்கங்களின் அடிப்படை விளைவினால் பாதிப்படைந்து, அண்மைக் காலத்தில் தற்காலிக வீழ்ச்சியை அனுபவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.
- இருப்பினும், அதன்பின்னர் குறைந்தளவான தளம்பலுடன் முதன்மைப் பணவீக்க இலக்குடன் அணிசேர்ந்து, இயல்புநிலையை அடையுமென எறிவுசெய்யப்படுகின்றது.

# பணவீக்கத் தோற்றப்பாட்டிற்கான இடர்நேர்வுகள்...

## மேல்நோக்கிய இடர்நேர்வுகள்

- வேளாண்மை உற்பத்தியினைப் பாதிக்கின்ற சாத்தியமான பாதகமான வானிலை நிலைமைகள்
- எதிர்பார்க்கப்படுகின்ற இறைத் திரட்சிப் பாதையிலிருந்தான ஏதேனும் விலகல்
- உயர்ந்த மட்டங்களிலான சாத்தியமான ரூபாய்த் தேய்மானம்
- உலகளாவிய நிச்சயமற்றத்தன்மைக்கு மத்தியில் உலக உணவு மற்றும் வலு விலைகள் மீதான சாத்தியமான மேல்நோக்கிய அழுத்தங்கள்

## கீழ்நோக்கிய இடர்நேர்வுகள்


- வலு விலைக் குறைப்புக்களின் சாத்தியமான இரண்டாம் சுற்றுத் தாக்கங்கள்
- அத்தியாவசியப் பொருட்களின் சாத்தியமான விலைக் குறைப்புக்கள்
- பொது மக்களின் குறைவடைந்த கொள்வனவு சக்தியின் நீடித்த தாக்கம்




# பொருளாதார வளர்ச்சித் தோற்றப்பாடு

# பொருளாதார வளர்ச்சியானது நடுத்தர காலத்தில் மெதுவடைந்த வேகத்திலேனும் அதன் மீளெழுச்சியினைத் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது...

எறிவுசெய்யப்பட்ட காலாண்டு உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி (ஆண்டிற்காண்டு,%)
2025 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றில் மேற்கொள்ளப்பட்ட எறிவுகளின் அடிப்படையிலமைந்துள்ளது




குறிப்பு: 2025 சனவரி மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைப்பனவாக இருந்த தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை வீச்சு வரைபடத்திலுள்ள எறிவுகள் பிரதிபலிக்கின்றன

வளர்ச்சிக்கு ஆதரவான கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் எதனையும் உள்ளடக்காத தற்போதைய தகவல்களின் அடிப்படையில், பொருளாதாரம் நடுத்தர காலத்தில் அதன் முழு இயலாற்றத்திற்கும் பார்க்க் குறைவாகவே செயற்படுமென எறிவுசெய்யப்படுகின்றது

# வளர்ச்சித் தோற்றப்பாட்டிற்கான இடர்நேர்வுகள்...

## கீழ்நோக்கிய இடர்நேர்வுகள்

- திறைமைசாலிகளின் வெளியேற்றமானது தொழிலாளர் பற்றாக்குறைகளுக்கும் தாழ்ந்தளவிலான உற்பத்தித்திறனுக்கும் வழிவகுக்கக்கூடும்
- அசாதாரணமான வானிலை நிலைமைகள் மற்றும் காலநிலை மாற்றம் என்பன பொருளாதார நடவடிக்கைகளில் எதிர்மறையாகத் தாக்கம் செலுத்தக்கூடும்
- ஐக்கிய அமெரிக்காவின் கொள்கை மாற்றங்களிற்கு மத்தியில் உலகளாவிய நிச்சயமற்றதன்மையினால் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தில் சாத்தியமான தாக்கம்

## மேல்நோக்கிய இடர்நேர்வுகள்

- படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையின் வெற்றிகரமான நிறைவின் தாக்கம்
- வளர்ச்சி சார்ந்த புதிய கொள்கைகளின் அறிமுகம்
- சுற்றுலாத்துறையின் மீளெழுச்சியின் காரணமாக ஏற்படும் சாத்தியமான கசிவுத்தாக்கங்கள்




# சிறப்புக் குறிப்புகள்

# சிறப்புக்குறிப்பு அ: பணவீக்க வீச்சு வரைபடத்தை எப்படி விளங்கிக்கொள்வது...

**பணவீக்க வீச்சு வரைபடம்** என்பது **எதிர்வுகூறல் தொடர்பான நிச்சயமற்றதன்மையின்** குறிகாட்டுதலொன்றுடன் **இணைந்து பணவீக்க எதிர்வுகூறலினைத் தெரிவிக்கின்றதொரு முறையாகும்.**


**வீச்சு வரைபடமொன்றில் எவை உள்ளடக்கப்பட்டுள்ளன:**

- **அண்மைய வரலாற்றில் அடையப்பட்ட பெறுமதிகள்**
- **நம்பிக்கை இடைவெளிகள்**
  - *...எதிர்வுகூறல் காலப்பகுதியில் பணவீக்கம் காணப்படக்கூடிய பெறுமதிகளின் சாத்தியமான வீச்சுக்களைப் பிரதிபலிக்கின்றன*

**பணவீக்க வீச்சு வரைபடமொன்றின் முக்கிய கூறுகள்**


**முதன்மைப் பணவீக்க எறிவுகள் (காலாண்டு, கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)**

***2025 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றில் மேற்கொள்ளப்பட்ட எறிவுகளின் அடிப்படையிலமைந்துள்ளது***



# சிறப்புக்குறிப்பு ஆ: இலங்கையின் பணச்சுருக்கத்தினை ஏற்படுத்திய விலைப் போக்குகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள்...

**2024 சனவரி தொடக்கம் 2025 சனவரி வரையான காலப்பகுதியில் குடியிருப்புச் செலவிடலின் வீழ்ச்சிக்கான பங்களிப்பு**




(கொ.நு.வி.சு அடிப்படையாகக் கொண்டது, ரூ.)

"நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு ஓராண்டிற்கு முன்னரான அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் பொருளாதாரமொன்றின் ஒட்டுமொத்த விலை மட்டத்தில் ஏற்படும் வீழ்ச்சியொன்றினால் பணச்சுருக்கமானது அடையாளப்படுத்தப்படுகின்றது"

கடந்த சில மாதங்களாகப் பணச்சுருக்கமானது தொடர்ச்சியாகக் காணப்பட்டுள்ள போதிலும் வாழ்க்கைச் செலவிற்கு நிவாரணமொன்றாக அது பிரதிபலிக்கப்படுவதில்லை என சில பிரிவினர் ஏன் கூறுகின்றனர்?

- ஏற்கனவே உயர்வடைந்த விலை மட்டங்கள்
- கடந்த கால பணவீக்க நிகழ்வுகளின் தாக்கத்தினை எதிரீடுசெய்வதற்குப் பல வருமான மட்டங்கள் முழுமையாகச் சீராக்கப்பட்டிருப்பதற்கான சாத்தியத்தன்மை காணப்படுவதில்லை
- உளவியல் மற்றும் நடத்தைசார் அம்சங்கள்
- பணவீக்க எண்ணக்கரு பற்றிய விழிப்புணர்வின்மை


75 YEARS
STABILITY FOR PROSPERITY
நாணயக் கொள்கை
அறிக்கை
2025 பெப்புருவரி
ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# நன்றி